# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2152/14 - 2019 දෙසැම්බර් මස 03 වැනි අඟහරුවාදා - 2019.12.03

*2152/14 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 03 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV(அ) - மாகாண சபைகள்

### மாகாண சபை அறிவித்தல்கள்

**மேல் மாகாண மாகாண சபை**

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, மாகாண சபைகள் (இடைநேர் விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவுடன் வாசிக்கப்பட வேண்டிய நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 185 (1) (அ) ஆம் பிரிவின் கீழ் நடாத்தப்படும் விசாரணை*

மேல் மாகாணத்தின் ஆளுநர் விஜயபால சிறீ நாராயண வாசல பண்டாரநாயக்க மொஹொட்டலலாகே சீதா குமாரி அரம்பேபொல ஆகிய நான், 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, மாகாண சபைகள் (இடைநேர் விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 184 (1) (அ) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்கிய வகையில் எனக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரத்திற்கு இணங்க பின்வரும் விடயங்கள்/குற்றச்சாட்டுக்கள் காரணமாக வத்தளை-மாபோலை நகர சபை மற்றும் வத்தளை-மாபோலை நகர சபையின் தவிசாளராக செயற்பட்டபோது மேற்கூறிய நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 184(1) ஆம் உப பிரிவின் கீழ் காட்டப்படும் குற்றங்கள் இழைக்கப்பட்டுள்ளனவா என்று விசாரணை செய்து 03 மாதங்களினுள் அறிக்கை ஒன்றினை முன்வைப்பதற்காக தனி நபர் விசாரணை சபை ஒன்றாக ஓய்வுபெற்ற மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி திரு. சந்திரதாச நானயக்கார அவர்களை நியமிக்கின்றேன்.

வத்தளை - மாபோலை நகர சபைக்கு உரியதாக விசாரணை செய்யப்பட வேண்டிய விடயங்கள்/குற்றச்சாட்டுக்கள் ஆவன-

(I) வத்தளை-மாபோலை நகர சபையினால் நடவடிக்கைகளை மேற்கொண்ட போது 2018.05.21 ஆந் திகதி தொடக்கம் 2019.03.05 ஆந் திகதி வரையிலான கால எல்லையினுள் அல்லது அதற்கு அண்மித்த கால எல்லை ஒன்றினுள் வத்தளை-மாபோலை நகர சபைக்கு உரியதாக இருந்த அதிகாரம்பெற்ற நில அளவையாளர் திரு. டீ. ஏ. வீரக்கொடி அவர்களினால் தயாரிக்கப்பட்ட 1377 C ஆம் இலக்க 2018, சனவரி 17 ஆந் திகதிய வரைபடத்தின் காணித்துண்டு


1A - PG 4781 — 37 (2019/12)

*இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

இலக்கம் $1A^2$ ஆகிய 79 பேர்ச் அல்லது அதற்கு அண்ணளவான அளவொன்றைக் கொண்ட காணியை நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 36 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு முரணாக விற்பதற்கு நடவடிக்கை எடுத்து நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 184 (1) (ஆ) ஆம் பிரிவின் கீழ் வரக்கூடிய குற்றம் ஒன்றினை இழைத்திருந்தமை ;

(II) வத்தளை-மாபோலை நகர சபையினால் நடவடிக்கைகளை மேற்கொண்ட போது 2019.03.05 ஆந் திகதி அல்லது அதற்கு அண்மித்த தினமொன்றில் வத்தளை-மாபோலை நகர சபைக்கு உரியதாக இருந்த அதிகாரம்பெற்ற நில அளவையாளர் திரு. டீ. ஏ. வீரக்கொடி அவர்களினால் தயாரிக்கப்பட்ட 1377 C ஆம் இலக்க 2018, சனவரி 17 ஆந் திகதி வரைபடத்தின் காணித்துண்டு இலக்கம் $1A^2$ ஆகிய 79 பேர்ச் அல்லது அதற்கு அண்ணளவான அளவையுடைய காணியைக் குறைந்த மதிப்பீட்டுப் பெறுமதியின் கீழ் உரிய கேள்வி நடைமுறைகளுக்கு மாறாக விற்பதற்கு நடவடிக்கை எடுத்து நகர சபை நிதியத்திற்கு நட்டம் ஏற்படுமாறு செயற்பட்டு நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 184 (1) (ஈ) ஆம் பிரிவின் கீழ் வரக்கூடிய குற்றம் ஒன்றினை இழைத்திருந்தமை ;

(III) வத்தளை-மாபோலை நகர சபையினால் நடவடிக்கைகளை மேற்கொண்ட போது 2018.05.21 ஆந் திகதி அல்லது அதற்கு அண்மித்த தினம் ஒன்றில் வத்தளை-மாபோலை நகர சபைக்குரிய அதிகாரம்பெற்ற நில அளவையாளர் திரு. டீ. ஏ. வீரக்கொடி அவர்களினால் தயாரிக்கப்பட்ட 1377 C ஆம் இலக்க 2018, சனவரி 17 ஆந் திகதிய வரைபடத்தின் காணித்துண்டு இலக்கம் $1A^2$ ஆகிய 79 பேர்ச் அல்லது அதற்கு அண்ணளவான அளவையுடைய காணியை வரையறுக்கப்பட்ட மெல்கோ ஒட்சிசன் நிறுவனத்திற்கு விற்பதற்குத் தீர்மானித்து நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 184 (1) (உ) ஆம் பிரிவின் கீழ் வரக்கூடிய குற்றம் ஒன்றினை இழைத்திருந்தமை.

**வத்தளை - மாபோலை நகர சபையின் தவிசாளருக்கு உரியதாக விசாரணை செய்யப்பட வேண்டிய விடயங்கள்/ குற்றச்சாட்டுக்கள் ஆவன-**

(I) வத்தளை-மாபோலை நகர சபையின் தவிசாளராக செயற்பட்டபோது 2018.05.21 ஆந் திகதி தொடக்கம் 2018.07.13 ஆந் திகதி வரையிலான கால எல்லையினுள் அல்லது அதற்கு அண்மித்த காலம் ஒன்றினுள் வத்தளை-மாபோலை நகர சபைக்குரிய அதிகாரம்பெற்ற நில அளவையாளர் திரு. டீ. ஏ. வீரக்கொடி அவர்களினால் தயாரிக்கப்பட்ட 1377 C ஆம் இலக்க 2018, சனவரி 17 ஆந் திகதிய வரைபடத்தின் காணித்துண்டு இலக்கம் $1A^2$ ஆகிய 79 பேர்ச் அல்லது அதற்கு அண்ணளவான அளவையுடைய காணியை வரையறுக்கப்பட்ட மெல்கோ ஒட்சிசன் நிறுவனத்திற்கு விற்பதற்கு எனக் குறிப்பிட்டு குறைந்த பெறுமதியொன்றைப் பெற்றுக்கொள்வதற்கு ஏற்ற முறையில் மதிப்பீட்டுப் பெறுமதியினைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்து நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 184 (1) (உ) ஆம் பிரிவின் கீழ் வரக்கூடிய குற்றம் ஒன்றினை இழைத்திருந்தமை ;

(II) வத்தளை-மாபோலை நகர சபையின் தவிசாளராக செயற்பட்டபோது 2019.03.01 ஆந் திகதி அல்லது அதற்கு அண்மித்த தினம் ஒன்றில் வத்தளை-மாபோலை நகர சபைக்கு உரிய அதிகாரம்பெற்ற நில அளவையாளர் திரு. டீ. ஏ. வீரக்கொடி அவர்களினால் தயாரிக்கப்பட்ட 1377 C ஆம் இலக்க 2018, சனவரி 17 ஆந் திகதிய வரைபடத்தின் காணித்துண்டு இலக்கம் $1A^2$ ஆகிய 79 பேர்ச் அல்லது அதற்கு அண்ணளவான அளவையுடைய காணியை இலக்கம் 28, பகதல வீதி, கொழும்பு 03 என்ற முகவரியில் உள்ள மொஹொமட் சுபைர் பவுசுல் ஹக் என்பவருக்கு ஒழுங்கான கேள்வி நடைமுறையைக் கடைப்பிடிக்காது விற்பதற்கு நடவடிக்கை எடுத்து நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 184 (1) (ஆ) ஆம் பிரிவின் கீழ் வரக்கூடிய குற்றம் ஒன்றினை இழைத்திருந்தமை ;

(III) வத்தளை-மாபோலை நகர சபையின் தவிசாளராக செயற்பட்ட வேளையில் 2019.03.01 ஆந் திகதி அல்லது அதற்கு அண்மித்த தினம் ஒன்றில் வத்தளை-மாபோலை நகர சபைக்கு உரிய அதிகாரம்பெற்ற நில அளவையாளர் திரு. டீ. ஏ. வீரக்கொடி அவர்களினால் தயாரிக்கப்பட்ட 1377 C ஆம் இலக்க 2018, சனவரி 17 ஆந் திகதிய வரைபடத்தின் காணித்துண்டு இலக்கம் $1A^2$ ஆகிய 79 பேர்ச் அல்லது அதற்கு அண்ணளவான காணியை இலக்கம் 28, பகதல வீதி, கொழும்பு 03 என்ற முகவரியில் உள்ள மொஹொமட் சுபைர் பவுசுல் ஹக் என்பவருக்கு விற்பதற்கு விருப்பம் என்பதற்கான ஏற்றுக்கொள்ளல் கடிதத்தை வத்தளை-மாபோலை நகர சபையின் சபை இணக்கமின்றி வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்து நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 184 (1) (உ) ஆம் பிரிவின் கீழ் வரக்கூடிய குற்றம் ஒன்றினை இழைத்திருந்தமை ;

(IV) வத்தளை-மாபோலை நகர சபையின் தவிசாளராக செயற்பட்ட வேளையில் 2019.02.17 ஆந் திகதி தொடக்கம் 2019.03.01 ஆந் திகதி வரையிலான கால எல்லையினுள் அல்லது அதற்கு அண்மித்த கால எல்லை ஒன்றினுள் வத்தளை-மாபோலை நகர சபைக்கு உரிய அதிகாரம்பெற்ற நில அளவையாளர் திரு. டீ. ஏ. வீரக்கொடி

அவர்களினால் தயாரிக்கப்பட்ட 1377 C ஆம் இலக்க 2018, சனவரி 17 ஆந் திகதிய வரைபடத்தின் காணித்துண்டு இலக்கம் $1A^2$ ஆகிய 79 பேர்ச் அல்லது அதற்கு அண்ணளவான பெறுமதியுடைய காணியை விற்பதற்கு உரிய மேல் மாகாணத்தின் உள்ளூராட்சி விடயப் பொறுப்பு அமைச்சரின் 2019.02.07 ஆந் திகதிய ஆலோசனை அத்துடன்/அல்லது கட்டளைகளை கவனத்தில் கொள்ளாது செயற்பட்டு நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 184 (1) (இ) ஆம் பிரிவின் கீழ் வரக்கூடிய குற்றம் ஒன்றினை இழைத்திருந்தமை ;

மேலும், 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, மாகாண சபைகள் (இடைநேர் விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் இரண்டாம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 184 (1) (அ) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க விசாரணை ஆணைக்குழு சபைச் சட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்ட ஆணையாளர் ஒருவருக்குரிய அதிகாரம் இந்த தனிநபர் விசாரணை சபைக்கு உரித்தாகுவதுடன், மேற்குறிப்பிட்ட விடயங்களை விசாரணை செய்யும் போது உரியதாக்கிக் கொள்ளப்பட வேண்டியது என இனங்காணப்பட்ட எழுத்து மூல மற்றும் வாய்மூல சாட்சிகள் பின்வரும் அட்டவணையில் உள்ளடக்கப்பட்டுள்ளன என்பதனை மேலும் அறியத்தருகின்றேன்.

விஜயபால சிறீ நாராயண வாசல பண்டாரநாயக்க
மொஹொட்டலலாகே சீதா குமாரி அரம்பேபொல,
ஆளுநர்,
மேல் மாகாணம்.

மேல் மாகாண ஆளுநர் அலுவலகம்,
இல. 204, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2019, திசெம்பர் 02.

**அட்டவணை**

மேற்குறிப்பிட்ட குற்றச்சாட்டுக்களை உறுதிப்படுத்துவதற்காகப் பயன்படுத்தப்பட வேண்டிய எழுத்துமூல சாட்சிகள் :

(I) கே. பிரேமநாத் கலெஹெவத்த, சட்டத்தரணி மற்றும் நொத்தாரிசு அவர்களின் 2000, யூன் 08 ஆந் திகதிய 63 ஆம் இலக்க குத்தகை உடன்படிக்கையின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதி.

(II) 2018.05.21 ஆந் திகதி நடைபெற்ற விசேட பொதுச்சபைக் கூட்ட அறிக்கையின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதி.

(III) 2019.03.01 ஆந் திகதி பெறுகைக் குழுக் கூட்ட அறிக்கையின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதி.

(IV) 2019.03.01 ஆந் திகதி விலைமனுக்களைத் திறந்த கூட்ட அறிக்கையின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதி.

(V) வரைபட இலக்கம் 1377 C லொட் இலக்கம் $1A^2$ காணிக்காக அரசின் மதிப்பீட்டினைப் பெற்றுக்கொள்ளுதல் என்ற தலைப்பில் பிரதான மதிப்பீட்டாளரை விளித்து வத்தளை-மாபோலை நகர சபையின் தவிசாளரின் திகதி மற்றும் இலக்கம் அற்ற கடிதத்தின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதி ;

(VI) கம்பஹா மாவட்ட மதிப்பீட்டாளரின் GM/LM/5630 ஆம் இலக்க மற்றும் 2018.07.13 ஆந் திகதி வத்தளை-மாபோலை நகர சபையின் தவிசாளரை விளித்து அனுப்பிய கடிதத்தின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதி ;

(VII) கம்பஹா மாவட்ட மதிப்பீட்டாளரின் GM/LM/5630 ஆம் இலக்க மற்றும் 2018.12.21 ஆந் திகதி வத்தளை-மாபோலை நகர சபையின் தவிசாளரை விளித்து அனுப்பிய கடிதத்தின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதி ;

(VIII) திரு. ஏ. டீ. வீரக்கொடி அதிகாரம்பெற்ற நில அளவையாளர் அவர்களின் 1377 C ஆம் இலக்க வரைபடத்தின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதி ;

(IX) அதிகாரம்பெற்ற நில அளவையாளர் திரு. ஏ. ஏ. பீ. ஜயந்த பெரேரா அவர்களின் 1131 ஆம் இலக்க வரைபடத்தின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதி ;

(X) வத்தளை-மாபோலை நகர சபைக்கு உரிய சாகுபடி காணியை விற்பதற்காக அதிகாரத்தைப் பெற்றுக்கொள்ளுதல் என்ற தலைப்பில் உள்ளூராட்சி உதவி ஆணையாளரின் மூலம் உள்ளூராட்சி ஆணையாளரினூடாக கௌரவ முதலமைச்சரை விளித்த F/172/4 ஆம் இலக்க 2019.01.14 ஆந் திகதி வத்தளை-மாபோலை நகர சபையின் தவிசாளரின் கடிதம் மற்றும் அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகள்.

(XI) மேல் மாகாணத்தின் உள்ளூராட்சி அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளரின் CM/WP/E16/1/4/2016 கம்பஹா (II ஆம் அத்தியாயம்) இலக்க மற்றும் 2019.02.07 ஆந் திகதி உள்ளூராட்சி ஆணையாளரை விளித்து அனுப்பப்பட்ட கடிதத்தின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதி ;

(XII) வத்தளை-மாபோலை நகர சபையின் 132443 ஆம் குறிப்பு இலக்கம் 2019.03.05 ஆந் திகதிய ந. ச. 3 ஆகிய பற்றுச்சீட்டின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதி மற்றும் இலங்கை வங்கியின் 134748 ஆம் இலக்க கணக்கு இலக்கத்திற்கு 2019.03.05 ஆந் திகதி வைப்பிலிட்ட காசோலைப் பற்றுச்சீட்டின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதி ;

(XIII) திரு. மொஹொமட் சுபைர் பவுசுல் ஹக் அவர்களை விளித்து 2019.03.01 ஆந் திகதி வத்தளை-மாபோலை நகர சபையின் தவிசாளரினால் அனுப்பப்பட்ட கடிதத்தின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதி ;

(XIV) திரு. மொஹொமட் சுபைர் பவுசுல் ஹக் அவர்களை விளித்து 2019.03.05 ஆந் திகதி வத்தளை-மாபோலை நகர சபையின் தவிசாளரினால் அனுப்பப்பட்ட கடிதத்தின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதி ;

(XV) கேள்வி அறிவிப்பு பிரசுரிக்கப்பட்டிருந்த 2019, பெப்புருவரி மாதம் 15 ஆந் திகதிய "தினகரன்", மற்றும் "டெயிலி நியூஸ்" பத்திரிகைகளின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதி ;

(XVI) பெப்புருவரி மாதம் 14 ஆந் திகதிய "தினமின" பத்திரிகையின் கேள்வி அறிவிப்பின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதி ;

(XVII) மொஹொமட் நலீம் மொஹொமட் உஷான், இல. 454/21, பாடசாலை ஒழுங்கை, உலகிட்டிவல, மல்வான என்ற முகவரியில் இருந்து 2019.02.25 ஆந் திகதி முன்வைத்திருந்த கேள்விப் படிவத்தின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதி ;

(XVIII) திரு. மொஹொமட் சுபைர் பவுசுல் ஹக் அவர்கள் இலக்கம் 28, பகத்தல வீதி, கொழும்பு 03 என்ற முகவரியில் இருந்து 2019.02.22 ஆந் திகதி முன்வைத்திருந்த கேள்விப் படிவத்தின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதி ;

(XIX) மொல்பன் ரோலின் மில் தனியார் நிறுவனம், இலக்கம் 411, நீர்கொழும்பு வீதி, வத்தளை என்ற முகவரியில் இருந்து முன்வைத்திருந்த திகதியற்ற கேள்விப்படிவத்தின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதி ;

(XX) சட்டத்தரணி மற்றும் பகிரங்க நொத்தாரிசு ஜே. பீ. எம். எஸ். மதுவந்திகா அவர்களின் 15 ஆம் இலக்க குத்தகை உடன்படிக்கையை இரத்துச் செய்யும் ஆவணத்தின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதி ;

(XXI) சட்டத்தரணி மற்றும் பகிரங்க நொத்தாரிசு டபிள்யூ. டி. துஷார பிரியங்கர அவர்களின் 917 ஆம் இலக்க விற்பனைப் பத்திரத்தின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதி ;

(XXII) பகிரங்க நொத்தாரிசு ஜோசப் ஆதர் பல்லேகம அவர்களின் 1973, திசெம்பர் மாதம் 11 ஆந் திகதிய 2277 ஆம் இலக்க விற்பனைப் பத்திரத்தின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதி.

**மேற்குறிப்பிட்ட குற்றச்சாட்டுக்களை உறுதிப்படுத்துவதற்காகப் பயன்படுத்தப்பட வேண்டிய வாய்மூலமான சாட்சிகள் :**

| | | |
|---|---|---|
| (I) | உள்ளூராட்சி செயலாளர் (மே. மா.) அல்லது அவரினால் அதிகாரம் வழங்கப்படும் நபர் ஒருவர் | உள்ளூராட்சி அமைச்சு, மேல் மாகாணம். |
| (II) | உள்ளூராட்சி ஆணையாளர் (மே. மா.) அல்லது அவரினால் அதிகாரம் வழங்கப்படும் நபர் ஒருவர் | உள்ளூராட்சித் திணைக்களம், மேல் மாகாணம். |
| (III) | உள்ளூராட்சி உதவி ஆணையாளர், கம்பஹா மாவட்டம் | உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், கம்பஹா மாவட்டம் |

| | | |
|---|---|---|
| (IV) | திரு. எஸ். எம். பிரசன்ன ஆரியதிலக | பிரதேச மதிப்பீட்டாளர், மதிப்பீட்டுத் திணைக்களம், மேற்கு-வடக்கு அலுவலகம், கம்பஹா. |
| (V) | திருமதி தேவிகா பிரியந்தி ஹேரத் சமரவிக்ரம | முன்னைநாள் செயலாளர், வத்தளை-மாபோலை நகர சபை. |
| (VI) | திருமதி கீதானி லொகுவெல்ல | செயலாளர், வத்தளை-மாபோலை நகர சபை. |
| (VII) | திரு. டி. ஏ. வீரக்கொடி | அதிகாரம்பெற்ற நிலஅளவையாளர், 17/4, விஜய மாவத்தை, நாவல வீதி, நுகேகொடை |
| (VIII) | திரு. ஏ. ஏ. பீ. ஜயந்த பெரேரா | அதிகாரம்பெற்ற நிலஅளவையாளர், 218, மாகேவிட்ட வீதி, ஜா-எல. |
| (IX) | திருமதி தேவிகா ராணி சந்திர மோஹன் | பிரதான முகாமைத்துவ உதவியாளர், வத்தளை-மாபோலை நகர சபை. |
| (X) | திருமதி கெகுலாவல ஜயவர்தனலாகே ஜீவா சமந்தி ரணசிங்ஹ | உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தர், வத்தளை-மாபோலை நகர சபை. |
| (XI) | திருமதி முத்து ராகினி | முகாமைத்துவ உதவியாளர், வத்தளை-மாபோலை நகர சபை. |
| (XII) | திருமதி பாலசூரிய லேகம்லாகே பாக்யா உமயங்கனி | தொழில்நுட்ப உத்தியோகத்தர், வத்தளை-மாபோலை நகர சபை. |
| (XIII) | திருமதி நிலாப்தீன் றிஷ்மினா | சுகாதாரத் தொழிலாளி, வத்தளை-மாபோலை நகர சபை. |
| (XIV) | திரு. வெடிசிங்ஹ ஆரச்சிகே ரவீந்திர சானக்க இந்திரஜித் | வருமானப் பரிசோதகர், வத்தளை-மாபோலை நகர சபை. |
| (XV) | திரு. ஹெட்டிஆரச்சிலாகே மங்கல பிரேமகுமார | முகாமைத்துவ உதவியாளர், வத்தளை-மாபோலை நகர சபை. |
| (XVI) | திருமதி சந்துனி தருஷிக சில்வா | முகாமைத்துவ உதவியாளர், வத்தளை-மாபோலை நகர சபை. |
| (XVII) | திரு. மொஹொமட் சுபைர் பவுசுல் ஹக் | இலக்கம் 28, பகத்தல வீதி, கொழும்பு 03 |
| (XVIII) | திரு. மொஹொமட் சித்தீக் மொஹொமட் நஜபுதீன் | பணிப்பாளர், மெல்கோ ஒக்சிஜன் (தனியார் தாபனம், இலக்கம் 411, நீர்கொழும்பு வீதி, வத்தளை. |
| (XIX) | திரு. எம். ஜீ. ஜீ. ஜே. பிந்து | உதவி உள்ளூராட்சி ஆணையாளர் (புலன் விசாரணை) பதில், உள்ளூராட்சித் திணைக்களம், மேல் மாகாணம். |
| (XX) | திரு. டபிள்யூ. பத்மசிறி | புலன் விசாரணை உத்தியோகத்தர், உள்ளூராட்சித் திணைக்களம், மேல் மாகாணம். |

*12-560*